[1986 நவம்பர் 18

மாண்புமிகு திரு. கே.கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இப்படி அணைக்கட்டுகள் கட்டப்படுகின்ற நேரத்தில், கீழே இருக்கின்ற நஞ்சை நிலமாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த நிலமாக இருந்தாலும் சரி, அது பாதிக்கப்படாத நிலையில் சிறப்பான முறையில் பார்த்துத்தான் கட்டப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி, திட்டத்தை நிறைவேற்றும்போது அந்த நிலைமைகள் எல்லாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, சீராகக் கட்டப்படும்.

திருமலைராஜன் அரசலாறு கரைகளை அகலப்படுத்துதல்

68—(வினா எண் 8483)—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமலைராஜன், அரசலாறு ஆகிய ஆறுகளின் கரைப்பகுதிகளை அகலப்படுத்த அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ் எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, கேள்வி கேட்கப்பட்ட முறையே கொஞ்சம் மாறியிருக்கிறது என்று நினைக்கிறேன். கரையை அகலப்படுத்துவதற்காக கேட்கப்பட்ட கேள்வியேயல்ல அது. கரையை அகலப்படுத்த வேண்டாம். இந்த இரண்டு ஏரிகளிலிருந்தும் வாய்க்கால்கள் இருக்கின்ற காரணத்தால், திருமலைராஜன், அரசலாறு (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போட்ட கேள்விக்குத்தான் பதில் கிடைக்கும். அதற்கேற்றவாறு கேள்வி கேளுங்கள்.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, திருமலைராஜன் ஏரி, வேளாண்மைத் துறையால் பரிந்துரை செய்யப்பட்டு, திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அப்படி விவசாயத்துறையால் பரிந்துரை செய்யப்பட்ட காரணத்தால், திருமலைராஜன் ஏரியின் கரைகளை அகலப்படுத்தும் போது,—ஒரு கரையிலிருந்து இன்னொரு கரைக்கு விவசாயிகள் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிச் செல்லும்போது கரைகளை வண்டி போக்குவரத்திற்காக வெட்டி விடுகிறார்கள். அதன் காரணமாக வெள்ளக் காலங்களில் உடைப்பு ஏற்பட்டு விடுகிறது. எனவே அதைத் தவிர்ப்பதற்கு அந்த வண்டிப் பாலத்தையும் அகலப்படுத்துகின்ற பணியை திட்டத்தோடு சேர்த்து பாலம் அமைக்க, அது ஒரு வழி பாலமாக இருந்தாலும் போதும், அரசு முன்வருமா?

1986 நவம்பர் 18]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதை ஆராய்ந்து பார்த்து, சரியாக இருக்குமென்ற நிலையில் அது நிறைவேற்றப்படும்.

திருமூர்த்தி அணையிலிருந்து ஏரிகளுக்கு தண்ணீர் விடுதல்.

69—(*வினா எண் 9423)—திரு. கு. ரமணி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம் ஆளியார் பாசனத் திட்டத்தைச் சேர்ந்த திருமூர்த்தி அணையிலிருந்து தெற்கு பகுதியில் உள்ள ஏழு ஏரிகளுக்கு வெயில் காலத்தில் தண்ணீர் திறந்து விட்டு நிரப்புவது உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) உண்டு.

(ஆ) ஏழு குளத்தில் இரண்டாவது பாசன காலம் வெயில் காலத்தை ஒட்டி (அதாவது மார்ச் முதல் மே மாதம் முடிய) வருகிறது. இப் பருவத்தில் திருமூர்த்தி அணையில் நீர் இருப்பின் திறந்துவிடப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏழு ஏரிகள் நிறைவேற்றப்படும் திட்டத்தினால், சில குறிப்பிட்ட வசதி படைத்தவர்கள் தான் பயன் பெறுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதுவும் சில அதிகாரிகளுடன் சேர்ந்து அந்த ஏற்பாடு செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இது சம்பந்தமாக சில புகார்கள் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்று தெரிய வந்திருக்கிறது. அரசுக்கு அந்தப் புகார்கள் கிடைக்கப்பெற்றனவா? அப்படியென்றால், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? வசதி படைத்தவர்கள் மட்டுமல்லாமல் ஏழை விவசாயிகளுக்கும் அந்தத் தண்ணீர் கிடைக்கக்கூடிய வகையில், அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அப்படி புகார் எதுவும் அரசினுடைய கவனத்தில் இல்லை. புகாரை யாரும் அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை. தவறு இருக்குமென்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, கோடிட்டுக் காட்டினால் போதும். அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.